
வீட்டுக்குப் போகும் குட்டி யானை



பூ. இரத்தினசபாபதி,M.Sc., M.Phil.,

நூல் அறிமுகம்

நூலின் பெயர் : வீட்டுக்குப் போகும் குட்டி யானை

நூல் ஆசிரியர் : பூ. இரத்தினசபாபதி,M.Sc., M.Phil.,

முதற் பதிப்பு : 2022

பக்கம் : 32

உரிமை : ஆசிரியருக்கு

பதிப்பு : அருண் பதிப்பகம், கோவை

அச்சு புள்ளி : 11 புள்ளி


வடிவமைப்பு : மின் புத்தகம்

நன்மதிப்பு : நீங்கள் விரும்பும் எதுவும்

(ஒரு மரம் நட்டு வளருங்கள்)

வீட்டுக்குப் போகும் குட்டி யானை

பூ. இரத்தினசபாபதி



யானையை அழிவில் இருந்து
பாதுகாக்கவும், விழிப்புணர்வுக்காகவும்,

ஒவ்வொரு ஆண்டும்

ஆகஸ்ட் மாதம் 12ம் தேதி

உலக யானை தினமாக

கொண்டாடபட்டு வருகின்றது.

மரம் தான் மண்ணுக்கு உரம்

மழை தான் மரத்துக்கு வரம்.

மரம் வளர்ப்போம்!

வளம் பெறுவோம்!!

பூ. இரத்தினசபாபதி

அணிந்துரை

கோவி. இராமசாமி,

M.A.(Eng), M.Sc., M.Phil., Phd.,

முன்னாள் முதல்வர்:

- ஏ.வி.சி கல்லூரி, மயிலாடுதுறை
- ஏ.ஆர்.சி கல்லூரி, மயிலாடுதுறை
- பேராசிரியர், தனபாலன் அறிவியல் கலைக்கல்லூரி, சென்னை.

‘



கற்க கசடற.. கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக என்ற வள்ளுவரின் வாக்கியத்திற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்து வரும் எனது முன்னாள் மாணவரின் இனிய நல்படைப்புக்கு எனது அகங்கனிந்த பாராட்டுக்கள்.

நூலறிவும், அனுபவ அறிவும் நிறைந்த படைப்பாசிரியர் இருபதாண்டுகளுக்கு முன் கண்ட காட்சியையும், இளமையில் கற்ற காக்கை கதையையும் அருமையாக இணைத்து அளவில் சிறிய நூலாக ஒளிப்படங்களுடன் ஆற்றோட்டமாக சொல்லி இருப்பது நிறைவைத் தருகிறது.

யானைகள் தமிழிலக்கிய வரலாற்றில் பலவாறு பேசப்பட்டுள்ள செய்திகளை நன்கறிந்த இரத்தினசபாபதி யானை மீட்பில் பங்கேற்று செயலாக்கியதை பாராட்டுவதோடு, அவரின் இந்தபடைப்பின் மூலம் அச்செயலை நன்கு ஆவணபடுத்தியுள்ளார். யானைகளின் வீடாகிய காட்டிற்கு திரும்ப நன்றி கூறி சென்றது என்று முத்தாய்ப்பாய் முடித்துள்ளார்.

யானையைப் பற்றிய பல செய்திகளை ஆங்காங்கே நூலில் இடம்பெறச் செய்துள்ளார். தமிழுக்கு இன்னும்பல காட்டுயிர் செய்திளை நூலாக்கம் செய்ய விரும்பும் இவரின் சீரிய முயற்சிகள் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

நூல்களின் நேசிப்பும், வாசிப்பும் என்றும் எல்லோருக்கும் இருக்கட்டும். தமிழை அறிவியலோடு வளர்ப்போம், நாமும் வளமாய் வாழ்வோம்.. நல்லமுயற்சிக்கு நல்வாழ்த்துகளுடன்

கோவி. இராமசாமி
மயிலாடுதுறை

அலைபேசி:***9842425634***
மின்னஞ்சல்:gramaswamy52@gmail.com

பதிப்புரை

எண்ணத்தில் தெளிவும் சிந்தனையில் தூய்மையும், நட்பில் அன்பையும் கொண்ட இந்த நூலாசிரியர் பற்றி அதிகம் சொல்ல தேவையில்லை என்பதை தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு உயிரினமும் அறியும்.

இந்தியாவின் தேசிய பறவையான மயில் பற்றி ஆய்வு செய்துள்ள திரு பூ.இரத்தினசபாபதி அவர்கள் பல்லுயிர் பாதுகாப்புக்கும் சுற்று சூழல் பாதுகாப்புக்கும் நேச கரம் நீட்டும் மாண்பினர்.

சுற்று சூழல் நிபுணராக வாழ்வின் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக விலங்குகளுடனும், மரங்கள், தாவரங்கள், பறவைகள் என இவைகளுடன் பணியாற்றி தன் வாழ்நாளை கழித்த இந்நூல் ஆசிரியர் தகவல்களையும், அனுபவத்தையும் ரசிக்கும்படியாக எடுத்து சொல்வதில் வல்லவர்.

அவர் தம் அனுபவத்தை இந்த நூலாக ஆக்கி தந்துள்ளார். விபத்தில் சிக்கிய இரட்டை யானை குட்டிகளை எப்படி மீட்டு தன் தாய் யானையுடன் சேர்த்தார்கள் என்பதை சொல்லி வரும் அனுபவ பகிர்வு தான் இந்த நூல்.

இயல்பாகவே இரக்க குணம் கொண்ட யானை, அவர்களுக்கு எப்படி நன்றி சொல்லியது என்பது பற்றியும் சுவாரசியமாக வடித்து தந்துள்ளார் இந்த நூல் ஆசிரியர் திரு பூ. இரத்தினசபாபதி.

'மன வளம் காக்கும் தீர்த்தங்கரரும்...., மண் வளம் காக்கும் விருட்சங்களும்...' என்ற இவருடைய முந்தைய புத்தகம் கோவிலில் உள்ள தல விருட்சங்களை பற்றிய நிறைய செய்திகளை தாங்கி வந்ததை நாம் அறிவோம்.

அந்த வகையில் நூலாசிரியரின் இன்னொரு அனுபவ படைப்பு தான் இந்த 'வீட்டுக்குப் போகும் குட்டி யானை'

என்ற உங்கள் கையில் தவழும் இந்த நூல்.

இது போன்ற அனுபவங்கள் தான் இளைய தலைமுறையினருக்கு சிக்கலான சூழலில் சரியாக கையாள உதவும் உத்தியாக அமையும். அதனால், விலங்குகள் ஆர்வலர்கள், மாணவர்கள் மட்டுமின்றி, அனைவரும் படித்து பயன் பெற வேண்டியது அவசியம். இவரின் அனுபவங்கள், தொடர்ந்து புத்தகங்களாக வர வேண்டும். அதனால் மக்கள் வாழ்வு செழுமை பெறவும் வேண்டும் என்று விரும்புகிறோம்.

இந்த புத்தகத்தை வாங்கி, நூலாசிரியரை ஊக்கப்படுத்தி, எங்களையும் கவுரவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

- பதிப்பாசிரியர்.

என்னுரை

காடுகளில் வாழும் விலங்குகளில் உருவத்தில் மிகப்பெரியதும் பலம் வாய்ந்த்தும் யானை ஆகும். நம்மைப் போன்று யானைகள் பெரும்பாலும் கூட்டமாக வாழக்கூடியது (Social Animal). இத்தகைய யானையை கூட்டமாக மிக அருகில் பார்ப்பதும் அரிது. அதுவும் மிக அரிதான இரட்டை குட்டிகளுடன் பார்த்தது என்பது எனது வாழ்வின் மறக்கமுடியாத தருணமாகும்.

யானை உருவத்தில் மட்டும் அல்ல அறிவிலும் பெரியது என்றால் வியப்பாக தான் இருக்கும். எத்தனை பெரியதாக இருந்தாலும், யானையை விரும்பாதவர்கள் யாரும் இருப்பார்களா? என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

"செங்கமலம்" என்ற யானை மன்னார்குடி ராஜகோபால சுவாமி திருகோயில் யானை என்பது பலருக்கும் தெரியும். பாப் கட் வைத்துக் கொண்டு இந்த யானையின் சுட்டித் தனமான விளையாட்டுக்கள் அவ்வப்போது சமூக வலைத்தளத்தில் பிரபலமாகி விடும். இந்த யானை மவுத்தார்கன் வாசிக்கும், ஷவரில் தான் குளிக்கும் இப்படி இதுக்கு ஒரு தனி அந்தஸ்து. (https://www.youtube.com/watch?v=kblwEMVv9KA)

இது போல யானைப் பாகன் லீவு போட்டுட்டு போகட்டுமா என்று யானையிடம் அனுமதி கேட்பது போன்ற இன்னொரு நிகழ்வு (https://www.youtube.com/watch?v=v50MATN1j08&t=33s)

என இப்படி பல செய்திகள் இன்றைய நாளில் கூட நாம் யானையின் அறிவுத்திறனை பார்த்து ரசித்து இருப்போம்.

இந்த யானைகள் கூட்டமாக வந்தாலும் சரி, தனியாக வந்தாலும் சரி, யானை என்றால் மனதில் மகிழ்ச்சி பிறக்காமல் இல்லை. இந்த யானையின் சினைக்காலம் தான் 22 மாதங்கள் என்றால் ஆச்சரியமாக தானே இருக்கிறது.

பாலூட்டி வகைகளில் இதுவே அதிக சினைக்காலம் கொண்ட விலங்காக இருக்கிறது. எப்போதுமே ஒரே ஒரு குட்டி போடும் இந்த யானை எப்போதாவது தான் இதற்கு இரட்டை பிரசவம். பிறக்கும் போதே சுமார் 100 கிலோ இருக்கும் இந்த யானை குட்டி.

தண்ணீர் இருக்குமிடத்தை 6 கி.மீ. தொலைவிலேயே அறிந்துகொள்ளும் திறன் பெற்றவை. யானைகள், முனகல், பிளிறுதல் மற்றும் மனிதனால் கேட்கமுடியாத பலவித ஓசைகள் மூலம் தங்களுக்கிடையே செய்திகளைப் பரிமாறிக் கொள்பவை. யானை. தண்ணீரில் நீண்டதூரம் நீச்சல் அடிக்கவும், தனது தும்பிக்கையால் எவ்வித வாசனையை நுகர்ந்து உணரவும் யானையால் தான் முடியும்.

இத்தனை பெரிய உடலை வைத்துக் கொண்டு ஏதாவது சுட்டித் தனம் செய்து அடிபட்டு விட்டால், அல்லது ஆபத்தில் சிக்கி விட்டால், அதை மீட்பதும் சிரமம். அவைகளுக்கும் தப்பி வர தெரியாது..குழந்தைகள் தானே.

அப்படி தான் ஒரு நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சி கோவை மாவட்டத்தில் உள்ள ஆணைக்கட்டியில் நடந்து. சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் நடந்த அந்த அனுபவ நிகழ்வை தான் இந்த புத்தகத்தில் தமிழ் பேசும் அன்பர்களுக்காக படைத்து மகிழ்கிறேன்.

இந்த செய்தியை புத்தகமாக கொண்டு வர

வேண்டும் என்று ஆவலை வெளிப்படுத்தி புத்தக வெளியிடுவதற்கும், அச்சு பிழை திருத்தங்கள் செய்தும் உதவி செய்த எனது நண்பர் திரு.**விசு அய்யர்** அவர்களுக்கு நன்றிகளை பதிவு செய்கிறேன்.கால்நடை மருத்துவர் திரு.**ந.ச மனோகரன்** மற்றும் பூங்கா சங்கச் செயலாளர் அவர்களுக்கும் நன்றியை பதிவு செய்கிறேன்.

இந்த புத்தகம் நூலாக வெளிவர அட்டைப்படம் வடிவமைத்து மின் ஒளி அச்சு செய்து மின் புத்தகமாக்கி தந்த அருண் பதிப்பகத்தாருக்கு நன்றி சொல்ல கடமை பட்டு உள்ளேன்.

2005 ஆம் ஆண்டு திரு **மாணிக்கம்** அவர்களுடன் இணைந்து படைத்த என்னுடைய ஆங்கில கட்டுரையினை வெளியிட்டு ஊக்குவித்த **இந்திய வனவிலங்கு அறக்கட்டளை** நிறுவனத்திற்கும் நன்றிகளை பதிவு செய்கிறேன்.

இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் முனைவர் **கோவி. இராமசாமி** அவர்களுக்கும் நன்றியை பதிவு செய்கிறேன்.

இந்த அனுபவ பகிர்வு வாழ்வில் இக்கட்டான தருணத்தில் எப்படி சிக்கலை சமாளிப்பது சூழ்நிலை அறிவு கொண்டு என்பதை கற்று உணர முடியும். மாணவர்கள் மட்டும் அல்லாது, எல்லோரும் இந்த புத்தகத்தை வாங்கி படித்து இன்புற வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளை பதிவு செய்து நூலுக்குள் அழைத்து செல்கிறேன். அன்புடன்,

பூ. இரத்தின சபாபதி.
2/11 சூர்யா நகர்,
விளாங்குறிச்சி
கோயம்புத்தூர் 641 035

மின்னஞ்சல்:brspathy@gmail.com
அலைபேசி:7200643747

வீட்டுக்குப் போகும் குட்டி யானை

"யானைக்கும் அடி சறுக்கும்" என்ற பழமொழியை நாம் கேட்டு இருப்போம். அது என்ன பழமொழி என்று கேட்பவர்களுக்காக, நடந்து வரும் போது, யானைக்கு அடி சறுக்கினால், ஆபத்து அதிகம் அடி பலமாக படும் என்பது தான்.

இது போல பழ மொழிகளை சின்ன வயதில் அந்த காலத்து தாத்தா பாட்டி நமக்கு சொல்லி தருவாங்க.. தூங்கும்போது கூட ஒரு கதை சொல்லி தூங்க வைப்பாங்க. அந்த கதை ஒவ்வொன்றும் ஒரு நீதியை சொல்லும் கதையாக இருக்கும். அறிவியல் சிந்தனையை தட்டி எழுப்புவதாக கூட இருக்கும். சில கதைகள் தன்னம்பிக்கையை ஊக்குவிக்கும் விதமாக கூட இருக்கும்.

பிஞ்சு மனதிலே தன்னம்பிக்கையை வளர்த்து விடும் அந்த உளவியல் தத்துவத்தை சொல்லிக் கொடுத்த அந்த வயதானவர்கள் இப்போதும் சில குடும்பங்களில் இருக்க தான் செய்கிறார்கள் கதைகளையும் சொல்லிக் கொண்டு தான் இருக்கிறார்கள்..

அந்த கதை எதுக்கு இப்போ



என்று யோசிக்க வேண்டாம். அப்படி அவர்கள் சொன்ன கதை தான் இந்த அனுபவ நிகழ்ச்சி கற்று தந்த பாடம்.

மனிதனை போல வளர்ப்பவர் சொல்வதை மட்டும் கேட்கும் யானை, சொல்வதை சரியாக புரிந்து கொள்ளும் திறன் கொண்டது. பேச மட்டும் தான் தெரியாது. மற்றபடி 5 கிலோ மூளை கொண்ட அறிவில் சிறந்த விலங்கு என்பதில் எள் அளவும் ஐயமில்லை. காட்டுக்கு ராஜா சிங்கம் என்றால் மந்திரி யானை தான் என்று சொல்லக் கூடிய அளவில் அறிவு படைத்தது இந்த யானைகள்.

ஒரு சமயம், கோவையில் உள்ள ஆனைக்கட்டி என்ற இடத்தில், தாகத்திற்கு தண்ணீர் குடிக்க வந்தது ஒரு யானை குடும்பம். அது இரட்டை குட்டி போட்ட ஒரு தாய் யானையுடன் தண்ணீர் இருக்கும் இடத்திற்கு வந்தது. வந்த இடத்தில், வழக்கம் போல தன் குறும்புத் தனத்தினால் அந்த இரட்டை குட்டிகள் தண்ணீர் தொட்டியில் விழுந்து விட்டன.

குட்டிகள் தண்ணீர் தொட்டியில் விழுந்தால் தாய் யானை பார்த்துக் கொண்டு சும்மா இருக்குமா என்ன?! சத்தம் போட்டு மற்ற யானைகளை கூப்பிடுகிறது. யானை கூட்டம் கூடி விட்டது. ஆனால், அங்கு கூடியிருந்த யானை கூட்டத்தால் தண்ணீர் தொட்டியில் விழுந்த யானை குட்டியை காப்பாற்ற முடியாமல்

சுட்டித் தனமான குட்டி யானை

போனது.

யானையை காப்பாற்ற நாம் ஏதாவது செய்ய வேண்டுமே என்று தான் எங்களுக்கும் தோன்றியது. அப்போது கோவை உயிரியல் பூங்கா என்று அழைக்கப்படும் நீலகிரி உயிர் கோள பூங்காவில் பணியாற்றிக் கொண்டு இருந்தேன்.

தென் இந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படும் ஊர் கொங்கு மண்டலத்தில் உள்ள கோயம்புத்தூர். இங்கே உயிரியல் பூங்கா சங்கம் 1986ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

இந்த சங்கம் கோயம்புத்தூருக்கு மேற்கே சுமார் 30கிலோமீட்டர் தொலைவில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுயில் ஆனைக்கட்டி என்ற இடத்தில் தான் நிறுவப்பட்டது. ஆனை என்பது யானை என்பதின் சொல்வழக்கு. யானையின் பெயரால் அமைந்துள்ள இவ்வூரில் இந்த கோவை உயிரியல் பூங்கா சுமார் 110 ஹெக்டேர் பரப்பளவு கொண்டது. இந்த மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள நீலகிரி உயிர்க்கோள காப்பகத்தில்

(Nilgiri Biosphere Reserve NBR) காடுகளை உருவாக்க பல்வேறு தாவரங்களை நட்டு பரமாரித்து வருகிறது.(11°6' N, 76°45'E)

நீலகிரி உயிர்க்கோள காப்பகத்தின் உருவாக்கமாக இருக்கும் உயிரியல் பூங்கா, அதன் தாவரங்கள் மட்டும் அல்லாது, விலங்கினங்களின் பாதுகாப்பிலும் கவனம் செலுத்துகிறது, இதனால் நீலகிரி உயிர்க்கோள காப்பகத்திற்க்கான விளக்க மையமாகவும் இப்பூங்கா செயல்படுகிறது (வாக்கர் மற்றும் பலர், 1999 மற்றும் 2004)

முதுமலை மற்றும் சிறுவாணி காடுகளை இணைக்கும் யானையின் பாரம்பரிய வழித்தடத்தின் ஒரு பகுதியாக, இப்பூங்காவின் கிழக்கு எல்லையில் காப்புக் காடு (Reserve Forest) உள்ளது. இப்பகுதியில் சிலசமயங்களில் முதுமலையில் ரேடியோ காலர் செய்து கண்காணிக்கப்பட்டு வரும் யானைகள் வருவதை பார்த்து இருக்கிறோம்.

இப் பூங்கா அமைந்துள்ள இடத்தில் பாசன தேவைக்காக ஒரு பெரிய தண்ணீர் தொட்டி அமைக்கப்பட்டு உள்ளது. இந்த தொட்டியின் அளவு சுமார் 22 அடி நீளமும், 11 அடி அகலமும் உடையது. இதன் ஆழம் 4 அடி வரை இருக்கும். பாசன வசதிக்காக வைக்கபட்டு இருக்கும் இந்த தொட்டியில் உள்ள நீரை அவ்வப்பொழுது வன விலங்குகள் வந்து பருகும். வன விலங்குகளின் நீர் தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதமாக இந்த தண்ணீர் தொட்டி அமைந்து இருக்கிறது.

கோடை காலத்தில், குறிப்பாக ஏப்ரல்-மே மாதங்களிலும் ஆகஸ்ட் மாதங்களிலும் காட்டு யானைகள் இந்த பகுதிகளில் அதிகமான நடமாட்டத்துடன் காணப்படும்..

ஒருநாளைக்கு, ஒரு யானைக்கு குறைந்த பட்சம் 100 லிட்டராவது தண்ணீர் தேவைப்படும். அதிகபட்சமாக ஒரு யானைக்கு 220 லிட்டர் தண்ணீர் தேவைப்படும்.

தொட்டிக்குள் விழுந்த யானை

ஆனைகட்டியில் பூங்கா உள்ள இடத்தில் கோடைகாலங்களில், நீர் அருந்த அடிக்கடி யானைகள் கூட்டமாக வந்து செல்வதைப் நாங்கள் பார்த்து இருக்கிறோம்.

சம்பவ நிகழ்வு 13 பிப்ரவரி 2002 அன்று இரட்டை கன்று ஈண்ட தாய் யானையுடன் தன் இரண்டு குட்டிகளும் நீர் அருந்த நுழைந்தது. சுமார் 3 அடி உயரம் இருக்கும் அந்த இரட்டை குட்டி யானைகள் பூங்காவின் பாசனத்திற்காக அமைக்கப்பட்ட அந்த பெரிய நீர் தொட்டியில் தனது சுட்டித்தனத்தினால் தொட்டிக்குள் விழுந்து விட்டன.

இரவு நேரத்தில் இந்த யானை குட்டிகள் தண்ணீர் தொட்டியில் விழுந்து விட்டன என்பது எங்களுக்கு தெரியாது

அதிகாலை சுமார் 2 மணி அளவில் யானைகளின் பிளிரல் சத்தம் கேட்டதாகவும், அதைத் தொடர்ந்து மற்ற யானைகள் கூட்டமாக வந்த்தாகவும் அறிந்தோம்..

பணியில் உள்ள தோட்ட தொழிலாளர்கள், காலை 6 மணி அளவில் அந்த இடத்தை ஆய்வு செய்தனர். அப்போது தான் இரண்டு குட்டி யானைகள் தண்ணீர் தாகம்

தணிக்க வந்த இடத்தில் தண்ணீர் தொட்டியில் விழுந்ததை தெரிந்து கொண்டனர்.

இரண்டு யானை குட்டிகள் தண்ணீர் தொட்டிக்குள் சிக்கியிருப்பதைக் கண்டதும் இச்சம்பவம் குறித்து கோயமுத்தார் வனத்துறையினருக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

யானை குட்டியை மீட்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் கூட்டமாக மற்ற யானைகளும் தண்ணீர் தொட்டியை சுற்றி இருந்தன. எப்படியாவது குட்டிகளை மீட்டு கொண்டு செல்ல வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது என்பதை கூடியிருந்த அந்த யானைகளின் கூட்டத்தில் ஒவ்வொரு யானையின் முகத்திலும் தெரிந்தது.

வனத்துறையினர் உதவியுடன் யானை குட்டிகளை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டோம். இம்முயற்சியில் என்னுடன், எனது சகபணியாளர் மாணிக்கம், கோயம்புத்தூர் வனத்துறை கால்நடை மருத்துவர் மற்றும் அவரது ஊழியர்கள், ஊர்பொது மக்கள் என 60க்கும் மேற்பட்டவர்கள் மீட்புப்பணியில் இணைந்தனர்

மீட்பு பணியில் இருந்தவர்களை தவிர பொது மக்களும் யானையை மீட்க வேண்டுமே என்ற ஆவலில் கூட்டம் சேர ஆரம்பித்தனர். மக்கள் கூட்டம் கூடிடவே, தன் "குட்டிகளுக்கு ஆபத்து வந்து விடும் போல" என்ற எண்ணத்தில் தாய் யானை அந்த இடத்தை விட்டு ஒரு அடி கூட எடுத்து வைக்காமல் இருந்தது. அந்த இடத்தை விட்டு வெளியேற மறுத்தது.

இந்த யானை கூட்டத்தில், வயது முதிர்ந்த தந்தம் உள்ள ஆண் யானைகள் அதிகம் இல்லை. மாறாக வயது வந்த மற்றும் துணை வயது வந்த ஆண் மற்றும் பெண் யானை தான் இருந்தன.

தாய் யானைக்கு மட்டும் அல்ல, நமக்கும் குட்டிகளை மீட்க வேண்டும் என்ற ஆவல் இல்லாமல் இல்லை. மீட்புக் குழுவில் உள்ளவர்கள் தொட்டியை நெருங்கும் போது யானை

தாகம் தீர்த்த காகம்

பிளிறல் சத்தம் அதிகமாக இருந்தது.. மீட்பு குழுவினராலும் தொட்டியை நெருங்க முடியவில்லை.. 10க்கும் மேற்பட்ட யானைகள் இருந்ததால் வேறு ஏதாவது உத்தியை கையாள வேண்டுமே என்று தோன்றியது.

கொஞ்ச நேரம் மூளையையும் கையையும் பிசைந்து கொண்டு இருந்த எங்களுக்கு ஒரு சிந்தனை தோன்றியது. உங்களுக்கு நினைவில் இருக்கிறதா, சின்ன வயதில், "தாகம் தீர்த்த காகம்" கதை படித்து இருப்போம்..

ஒரு நாள் காகம் ஒன்று காட்டுப் பகுதியில் சுற்றி திரிந்ததாம். அப்போது அதற்கு தண்ணீர் தாகமாக இருந்ததாம். எங்கே சுற்றியும் தண்ணீர் கிடைக்கவில்லையாம்.. சோகமாக ஒரு இடத்தில் உட்கார்ந்து இருக்கும் போது அங்கே ஒரு பானையில் கொஞ்சமாக பாதி அளவில் தான் நீர் இருந்ததாம். காக்காவுக்கு தண்ணீர் கிடைத்து விட்டதே என்று குஷி ஏற்பட்டது. பின்னர் குடிக்க முயன்ற போதுதான் கைக்கு எட்டியது

வாய்க்கு எட்டவில்லை.

பானையின் பாதி அளவில் இருக்கும் தண்ணீரை எப்படி குடிப்பது?... என்று சிந்தனையில் இருந்த அந்த காகம், ஏதாவது ஐடியா கிடைக்குமா என்று யோசித்ததாம்.

அந்த நீரை எப்படியாவது பருகி தன் தாகத்தை தனித்துக் கொள்ள வேண்டும் என்று ஆவலாக இருந்த அந்த காகம் யோசித்தபடியே அருகில் இருந்த ஒவ்வொரு கல்லாக பானையில் போட்டதாம். பானையில் போட்ட கற்கள் தண்ணீரை மேலே கொண்டு வர காகம் தண்ணீரை குடித்து விட்டு பறந்து சென்றது என்பது போல சிறு வயதில் கதை சொல்லி தந்து இருப்பார்கள். இது இயற்பியல் வல்லுநர் ஆர்க்கிமிடிஸ் நீர் இடப்பெயர்ச்சி கோட்பாடு (water displacement theory) என்பதை வளர்ந்த வயதில் தான் நாம் தெரிந்து கொண்டு இருப்போம்.



ஆனால் அன்றைய பெரியவர்கள் இந்த இயற்பியல் தத்துவத்தை பிஞ்சு மனதிலே ஆழமாக பதித்து, நம்மை சிந்திக்க வைத்து இருக்கிறார்கள் என்பது ஆச்சரியமான விஷயம் தானே..

இதெல்லாம் கதை சார். காக்காவுக்கு இதெல்லாம் தெரியுமா? காக்கா கல்லை போட்டதாம் தண்ணீர் வந்ததாம் என்றெல்லாம் வறட்டு வாதம் செய்பவர்களும் இருக்க தான் செய்கிறார்கள்.. ஆனால் உண்மையில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்தது என்பதை பர்வீன் காஸ்வான் என்ற IFS அதிகாரி தனது

டிவிட்டர் பக்கத்தில் 2020, நவம்பர் 15 அன்று “இயற்பியலில் பட்டம் வாங்கிய காகம்” என்று பகிர்ந்து உள்ளார். (https://twitter.com/i/status/1328019237458198534) அதில் ஒரு காகம் குறைந்த அளவில் உள்ள தண்ணீர் உள்ள தண்ணீர் பாட்டிலில் கற்களை போட்டு மேலே வந்த தண்ணீரை குடித்து பறந்தது என்பதை காண முடிகிறது.

இந்த சிந்தனை தான் தண்ணீர் தொட்டியில் விழுந்த குட்டி யானையை மீட்கும் பணியில் இருந்த எங்களுக்கும் தோன்றியது. சூழ்நிலை அறிவு, அன்றைய நாளில் அறிவியல் சிந்தனையை சொல்லி தந்த காகம் தண்ணீர் அருந்திய கதை எங்களை தட்டி எழுப்பியது.

அதன் அடிப்படையில், தண்ணீர் தொட்டியில் பாறாங்கற்களைக் கொட்டி தொட்டியின் தரையை உயர்த்துவது என்று மீட்பு குழுவில் முடி செய்தோம். அதே சிந்தனையில், மீட்புப் பணி தொடங்கபட்டது.

3 அடி உயரம் உள்ள அந்த குட்டி யானைகள் தண்ணீர் தொட்டியில் விழுந்த போது தொட்டியில் நீர் மட்டம் 2 அடியாக இருந்தது. ஆனால் குட்டியை மீட்க வேண்டும் என்ற ஆவலில், தாய் யானை தொட்டி தண்ணீரை எடுத்து சுற்றிலும் தெளித்து தன் வேதனையை வெளிப்படுத்தியதை உணர முடிந்தது.. அதனால் 2 அடி இருந்த தண்ணீர் தொட்டியின் உயரம் 11/2 அடியாக குறைந்து விட்டது.

பாரங்கற்களை தொட்டியில் கொட்டுவதன் மூலம் நீர்மட்டத்தை உயர்த்துவது, என்பதில் உறுதியாக இருந்த மீட்பு குழுவினர், தனது பணியில் துளியும் சோர்வில்லாமல் செயல்பட ஆரம்பித்தோம்

குட்டிகளை மீட்க வேண்டும் என்ற நோக்கத்தில் அங்கிருந்த யானை கூட்டத்தை விரட்டி அடிக்க முடிவு

செய்தோம். அதனால், குட்டிகளிடம் இருந்து தாயின் கவனத்தை சிதறடிக்க வேண்டும் என்பதற்காக, மீட்பு குழுவில் இருந்தவர்களும் பொது மக்களும் உரக்க கத்தினோம். பட்டாசுகளை வெடித்து குட்டிகள் மீது வைத்து இருந்த அந்த யானையின் கவனத்தை திருப்பி, அங்கிருந்து யானை கூட்டம் விரட்டப்பட்டன.

இந்த இடையூறுகள் கூட்டத்திலிருந்த மற்ற விலங்குகளை 500-600 மீட்டர்கள் தூரம் திரும்பிச் செல்லச் செய்தன, ஆனால் தாய் யானை பின்வாங்கி நின்று ஆக்ரோஷமாக குரல் எழுப்பியது மற்றும் தொட்டியைச் சுற்றியுள்ள மக்களை நோக்கி தண்ணீரை தெளித்தது. யானை தன் குட்டிகளை காக்கும் முயற்ச்சியில் மீட்புக்குழுவினரை விரட்டியது.

சுமார் ஐந்து நிமிட இடைவெளி தான் எங்களுக்கு கிடைத்தது. யானைகள் மீண்டும் தண்ணீர் தொட்டிக்கு வந்தன. குட்டிகளை எப்படியாவது மீட்டாக வேண்டும் என்று ஆர்வம் அதன் உணர்வில் தெரிந்தது.

இந்த ஐந்து நிமிட இடைவெளியைப் பயன்படுத்தி, மீட்புகுழு குட்டிகளுக்கு தீங்கு விளைவிக்காமல் தண்ணீர் தொட்டியில் கற்பாறைகள் மற்றும் சிறுகற்களை கொட்டியது.

யானைகள் மீண்டும் மீண்டும் தண்ணீர் தொட்டிக்கு வர கற்பாறைகள் நிரப்பும் பணியும் செய்யப்பட்டது. இவ்வாறாக

தொட்டியின் நீர்மட்டத்தை உயர்த்துவதற்காக இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக போராடி, கற்கள் கொட்டப்பட்டது.

'தாகம் தீர்த்த காகம்' சொன்ன சிந்தனை, மீட்புகுழுவின் விடாமுயற்சி குட்டிகளை தொட்டியின் மீது ஏற உதவியது

தொட்டியில் கொள்ளளவு 4 அடி தான். ஆனால், சம்பவத்தன்று தொட்டியில் நீர் அளவு 2 அடி தான் இருந்தது. எத்தனை கற்களை போட்டு உயர்த்தினாலும் 3 அடிக்கு நீர்

தன் கூட்டத்துடன் இணையும் இரட்டைக்குட்டிகள்

வராது. அதுவும் இருந்த 2 அடி தண்ணீரில் யானை சுமார் 1/2 அடி தண்ணீரை தெளித்து வெளியேற்றி விட்டது. அதனால் கற்களை போட்டால் நீர் உயரும் தரைமட்டமும் உயரும் குட்டிகளும் காப்பாற்றபடும் என்ற சிந்தனையில் மீட்பு குழுவினருக்கு வெற்றியே கிடைத்தது. இறைவன் படைப்பின் வியப்பு எங்களுக்கு ஆச்சரியமாக இருந்த்து.


மனிதனாக இருந்தாலும், விலங்காக இருந்தாலும் சரி இயற்கை எங்களுக்கு உதவியாக இருந்தது. ஆச்சரியமூட்டும் விஷயமாகும் என்பதில் ஐயமில்லை.

தாய் யானைக்கும் கற்பாறைகள் நிரப்பியது உதவியாக இருந்ததை கண்கூடாக கண்டோம் தாய் யானை தனது தும்பிக்கையைப் பயன்படுத்தி ஒவ்வொரு குட்டியாக கற்களின் மேல் ஏறி வர உதவியது

குட்டிகளை தாயிடம் சேர்த்து விட்டோம் என்ற மகிழ்ச்சியில் நாங்கள் மீட்பு குழுவினர் ஒருவரை ஒருவர்

முகத்தால் பார்த்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டோம்.

மீட்பு குழுவினருக்கும், பார்பவர்களுக்கும், இது மிகவும் மகிழ்ச்சியான தருணமாக அமைந்தது. இறுதியாக இரண்டு சுட்டி யானை குட்டிகளும் தனது கூட்டத்துடன் மிகுந்த மகிழ்ச்சியுடன் இணைந்தது, மனதை விட்டு நீங்காத நிகழ்ச்சியாக இன்றும் பசுமையாக உள்ளது.. சுமார் இருபது ஆண்டுகளுக்கு பிறகும் இந்த நினைவலைகள் நெஞ்சை தட்டுகிறதே. அந்த உணர்வை உங்களாலும் புரிந்து கொள்ள முடியும் என்பதை உணர முடிகிறது.



இது போல தமிழகத்தில் தற்காலிகமாக இடம் பெயர்ந்த காட்டு யானைக் குட்டிகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுவது இது முதல் முறையல்ல. 2000 ஆம் ஆண்டில், முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் (மேனன், தனிப்பட்ட தொடர்பு) ஒரு யானைக் குட்டி வெற்றிகரமாக காட்டுக் கூட்டத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டது இது பதிவுசெய்யப் பட்ட மற்றும் ஒரு நிகழ்வாகும்

இந்த நிகழ்வில்,எந்தவித இடையூறும் இல்லாமல் யானை கூட்டமானது எங்களுக்கு தந்த ஒத்துழைப்பு மறக்கமுடியாத அனுபவமாகும். எங்களுடன் இருந்த வனத்துறை அலுவலர்கள், ஊர்மக்களின் கூட்டுமுயற்சி, 'தாகம் தனித்த காகம்' சொல்லி தந்த சிறுவர்களுக்கான தமிழ் நீதி கதை என ஒவ்வொன்றும்

பதிவாக்க வேண்டும் என்று எண்ணி இருந்தோம். அது பல ஊடகத்தில் அந்த சமயத்தில் வெளி வந்தது. இந்த கட்டுரை ஆங்கிலத்தில் **back to wild** என்ற புத்தகத்தில் கட்டுரையாக வெளி வந்தது.

யானையின் வீடு காடு தானே.. அதனால் தாயுடன் காட்டுக்கு.. இல்லையில்லை... அதன் வீட்டுக்கு அனுப்பி "**வீட்டுக்குப் போகும் குட்டி யானை**"யை கண்டு மன நிறைவு அடைந்தோம்.

இந்த முயற்சியில் குட்டிகளை தாயுடன் சேர்த்த மகிழ்ச்சி இருந்தாலும் இந்த வெற்றியின் உச்சம் எது தெரியுமா? குட்டியுடன் சேர்ந்த தாய் யானை தனது தும்பிக்கையை உயர்த்தி மீட்பு குழுவினருக்கு நன்றி சொன்ன அந்த பிளிறல் சத்தம் தான். அந்த சத்தம் இன்னும் என் மனதில் ஒலித்துக் கொண்டு இருக்கிறது.

Based on the original article by Rathinasabapathy.B and Manickam,R (2005). Back to the Wild: Studies in Wildlife Rehabilitation. Menon, V., Ashraf, N.V.K., Panda, P. and Mainkar, K. (Eds.). Conservation Reference Series 2. Wildlife Trust of India, New Delhi. Pp207-208

References:

1. Marimuthu, R and Daniel,B.A (2016). Asian Elephant Information Guide. Zoo Outreach Organization, Coimbatore. Pp. 64.

2. Walker, S., Ashraf, N.V.K., Rathinasabapathy, B., Gupta, B.K.and Pal, A. (1999). The Nilgiri Biosphere Conservation Park: Biodiversity Conservation for the 21st Century. *In:* Plowmann, A.B. and Stevens, P.M.C. Whitley (eds.). *Proceedings of the 5th International Zoo Design.* Wildlife Conservation Trust.

Walker, S., Pal, A., Rathinasabapathy, B. & Manickam, R. (2004). Indian zoological and botanical gardens: Historical perspectives and a way forward. *Roots* 1(2): 9-23

நன்றி: இந்நூல் கல்வி விழிப்புணர்வு நோக்கத்திற்க்காக இந்திய வனவிலங்கு அறக்கட்டளையின் உரிமத்துடன் வெளியிடப்படுகிறது.

குறிப்பு; கோயம்புத்தூர் உயிரியல் பூங்கா சங்கம் தற்பொழுது நீலகிரி உயிர்கோள இயற்கைப் பூங்கா என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது

யானையை பற்றி
கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

■ *ஆங்கிலத்தில்* Elephant *என்பது நமக்கு தெரிந்த ஒன்று. இந்தவார்த்தை.* Elephas *என்ற கிரேக்க மொழியில் இருந்து வந்ததாகும்.. இந்திய யானை* Asian Elephant Elephas maximus.



■ *யானைகள் கிட்டதட்ட நான்கு மணி நேரம்தான் உறங்கும். சிலசமயங்களில் நின்றுகொண்டும் உறங்கும்..*

■ *யானைகள் உறங்கும் நேரம் தவிர பெரும்பாலான நேரத்தை உணவு தேடவும் உண்பதற்காகவும் பயண்படுத்துகின்றன.*

■ *யானைகளால் துள்ளி குதிக்க முடியாது*

■ *பெரிய விலங்கான யானைக்கு சிறு உயிரினங்களான எறும்பு, தேனீ தான் எதிரி.*

■ *யானைகளுக்கு கண்பார்வை திறன் குறைவு. ஆனால் நுகர்வதிலும், கேட்பதிலும் அதிக திறன் படைத்தவை.*

■ யானைக்கு நீர் மிகவும் அத்தியவாசியமான ஒன்று.

■ நீர்நிலைகளைக் கண்டால் சிறுபிள்ளைத் தனமாக நீரில் இறங்கி ஆட்டம் போட ஆரம்பித்துவிடும். அதுவும் யானை கூட்டமாக இருந்தால் குதுகலத்துடன் விளையாட ஆரம்பித்து விடும்.

■ யானையின் பரிணாம வளர்ச்சியால் குட்டி பிறந்த சிறிது நேரத்திலேயே எழுந்து நிற்கும் திறன்படைத்தவை.

■ யானையின் பிளிறல் சத்தமானது உற்ச்சாகத்தின் போதும், துன்பத்தின் போதும், ஆக்ரோஷமாக இருக்கும் போதும் வேறுபடும். இந்த பிளிறல் ஒலியை வைத்துதான் மற்ற யானைகள் சூழ்நிலையை உணர்ந்து செயல்படும் திறன் படைத்தவை.

■ யானையின் சினைக்காலம் 22 மாதங்கள்

■ பிறந்த குட்டி யானையின் எடை 100 கிலோ வரையில் இருக்கும்.

■ யானையின் மூளை 5 கிலோ இருக்கும்.

■ யானை தண்ணீர் இருக்கும் இடத்தை 6கிமீ தூரத்திலேயே அறிந்து கொள்ளும் திறன் படித்தவை.

மின் நூலின் பயன்கள்.

- பாதுகாப்பது சுலபம். சின்ன மெமரி கார்டில் 1000 புத்தகம் சேமிக்கலாம்

- மொபைலில் வைத்து செல்லும் இடம் எல்லாம் படிக்கலாம்

- புத்தகம் வைக்க இடம், தேவையில்லை.. cloudல் கூட சேமிக்கலாம்.

- பல தலைமுறைகளுக்கு பொக்கிஷமாக தரலாம்

- பிழைகளை திருத்துவது சுலபம்.

- கிண்டல், விக்கிமிடியாவில் பதிவிறக்கம் செய்து கொல்லாம்

- அச்சு செல்வு இல்லை என்பதால் விலை குறைவாக இருக்கும்.

குறிப்புகளுக்காக..

நூல் ஆசிரியரின் கை வண்ணத்தில்
மலர்ந்த இன்னொரு படைப்பு:

“மன வளம் காக்கும் தீர்த்தங்கரரும்...
மண் வளம் காக்கும் விருட்சங்களும்..”



ஸ்தல மரங்கள் பற்றிய அரிய பல குறிப்புகளை கொண்டது இந்த புத்தகம்.

இந்த புத்தகம் விக்கிமீடியா,மற்றும் அமேசான்-கிண்டலில் கிடைக்கும். scribd மின் நூலகத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

புத்தக அச்சு பிரதிகள் தேவைப்படுவோர் ஆசிரியரை தொடர்பு கொண்டு (brspathy@gmail.com) பெறலாம்.

ஆசிரியர் குறிப்பு...

இயற்கை வளம் நிறைந்தது இந்திய திருநாடு. அந்த தாய் திருநாட்டில், வழிப்பாட்டுக்கு குறிப்பாக சொல்லப்படுவது தென் தமிழ்நாடு. தென் தமிழ்நாட்டின், சிறப்பாக பேசப்படும் கொங்கு நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உயிர்கோள இயற்கைப் பூங்காவில் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றியவர், இந்நூல் ஆசிரியர் பூ. இரத்தினசபாபதி.



Nature for Future என்ற அமைப்பின் நிறுவனரான இவர், காடு வளர்ப்பு, பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் இயற்கை புணரமைப்பு பணிகளில் திட்ட தாவரங்கள், பல்லுயிரிணம், சுற்றுச் சூழல்கல்வி போன்ற பிரிவுகளில் 50க்கும் மேலான ஆராய்ச்சி கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர், ஆரோவிலில் உள்ள பிச்சாண்டிக்குளம் காடுகள் ஆலோசனை மையத்தில் சுற்றுச் சூழல் வல்லுனராக பணியாற்றி வருகிறார். இந்திய கடல் கடந்து ஜெர்மனியில் நதிநீர் சூழல் மேம்பாடு திட்ட பணிகளில் பயிலச் சென்றது குறிப்பிடத் தக்கது.

பழக்கப்படா உயிரியல் (Wildlife Biology)முதுகலை பட்டம் பெற்றுள்ள இவர் (M.Sc.,M.Phil.,) இந்தியாவின் தேசிய பறவையான மயில் பற்றியும் அதன் வாழ்வியல் நிலை குறித்தும் ஆய்வு செய்துள்ளார்.

ஜெரால்டு விருது ரூ.1 லட்சமும் தாவரங்கள் பாதுகாப்புக்கு பன்னாட்டு விருது ரூ.5 லட்சமும் பெற்ற இவரின் ஆய்வு கட்டுரைகளும் ஆய்வு தொகுப்புகளும் நம்மை வியக்க வைக்கும் அறிய பொக்கிஷமாக இருக்கிறது.

கோயம்புத்தூர் விலங்குகள் நல வாரியம் அமைப்பு, தென்னிந்தியா பன்னாட்டு மிருக பயிலர் சங்கம், மற்றும் வனவிலங்கு மறுவாழ்வு மையம், போன்ற பல இந்திய அமைப்புகளில் உறுப்பினராக சிறப்பாக தொண்டு செய்யும் இவரின் அன்புள்ளம் பாராட்டுக்குரியது.

பிரிட்டிஷ்,ஜெர்சி, தைவான், சிங்கப்பூர் மற்றும் ஜெர்மனி போன்ற பல வெளிநாடுகளில் சுற்றுப்புற மேம்பாட்டு கருத்தரங்கம், ஆய்வரங்கம், பயிலரங்கம் என பல நிலைகளில் பங்கு பெற்று பெருமை சேர்த்தவர்.